# தூத்துக்குடி நகரமன்றம்
# சாதாரணக் கூட்டப்பொருள்

2007ஆம் ஆண்டு ஜுன் மாதம் 22 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10. 00 மணிக்கு தூத்துக்குடி நகராட்சி அலுவலகம் இராவ்பகதூர் குரூஸ் பர்னாந்து கட்டிடத்திலுள்ள கூட்ட மண்டபத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## பொருள்கள்

1. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் மகப்பேறு உதவியாளர் ஆக பணிபுரிந்து வயது முதிர்வு காரணமாக 30–4–2007ல் ஓய்வுபெற்ற திருமதி அல்போன்ஸ் போரஸ்மெல் என்பவருக்கு அன்னார் பணியாற்றிய காலத்தில் பிடிதரம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ 2960/– வட்டி ரூ 8114/– மானியம் ரூ 5000/– ஆக மொத்தம் ரூபாய் 16074/– (ரூபாய் பதினாராயிரத்து எழுபத்து நான்கு மட்டும்) ஐ பொது நிதியிலிருந்து வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு** அனுமதிக்கலாம்.

எச்2. 8117/2006

**தீர்மான எண் – 344**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

2. இந்நகராட்சிக்கு சொந்தமான TN 69– 4446 அம்பாசிடர் வாகனம் பழுதுநீக்கப் பணிகள் மேற்கொள்ள மன்றம் தனது தீர்மானம் எண் 672 நாள் 22–5–2006ல் அனுமதி அளித்துள்ளதன் பேரில் 11–5–2007ல் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் மூன்று அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் இருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்று உள்ளது. இவைகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| 1. | மெசர்ஸ் எஸ்.ஜி. ஜெயராஜ் நாடார் அன்ட் சன்ஸ்<br>176பி திருவனந்தபுரம் சாலை, திருநெல்வேலி | ரூ 58,590/–<br>+ வரிகள் |
| 2. | மெசர்ஸ் ஆர்.என்.ஆர். மெக்கானிக்கல் ஒர்க்ஸ்<br>சிதம்பரநகர், தூத்துக்குடி | ரூ 60,670/–<br>+ வரிகள் |
| 3. | மெசர்ஸ் ஜெய் ஆட்டோ கேரேஷ்,<br>கால்டுவெல் காலனி, தூத்துக்குடி | ரூ64,560/–<br>+ வரிகள் |

இவ்வாகனத்தின் நான்காம் ஆண்டு பராமரிப்பிற்கு ரூ 37,450 மட்டுமே செலவு செய்ய அரசாணையில் அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே அரசு அனுமதிக்கப்பட்ட தொகையை விட கூடுதலாக ஆகும் செலவுத்தொகைக்கு அரசின் பின்னேற்பு பெறவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

## அலுவலகக் குறிப்பு

1. நகர்மன்ற தலைவர் அவர்களின் அலுவலகப் பணி ஆய்வு வாகனம் பணிகள் அவசியம் மேற்கொள்ள வேண்டியிருப்பதால் செலவீனத்திற்கு அனுமதி அளிக்கலாம்.
2. அரசின் அனுமதியை விட கூடுதலாக ஆகும் தொகைக்கு அரசின் பின்னேற்பு பெறவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ் ஜெயராஜ் அண்ட் சன்ஸ் திருநெல்வேலி நிறுவனத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ளவும் மன்ற அனுமதியை எதிர்நோக்கி மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

நகஎண் இ1. 8145/2007

**தீர்மான எண் – 345**

அலுவலகக் குறிப்பு 1. 2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது

3. ஒப்பந்ததாரர் திரு. பெருமாள் என்பவர் இந்நகராட்சியில் பல்வேறு பணிகளுக்காக செலுத்திய முன் வைப்புத்தொகை ரூ 18400/– மூன்றாண்டுகளுக்கு மேலாகி உள்ளதால் காலங்கடந்த வைப்புத்தொகையாக கணக்கிற்கு எடுத்து செல்லப்பட்டுள்ளது. எனவே மேற்படி காலங்கடந்த வைப்புத்தொகை ரூ 18400/–ஐ மேற்படியாருக்கு திரும்ப வழங்குவதற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்.

நகஎண் 20774/07/பி3

**தீர்மான எண் – 346**

அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது

4. இந்நகராட்சிப் பகுதி வார்டு எண் 35 கதவு எண் 50சி லெவஞ்சிபுரம் சால்ட் சந்து முகவரியில் அமைந்துள்ள காமராஜ் கல்லூரிக்கு குடிநீர்க் குழாய் இணைப்பு புதியதாக வழங்குமாறு கோரி வைப்புத்தொகை ரூ 6000/– பதிவுக் கட்டணம் ரூ 100/– செலுத்தி மேற்படி கல்லூரி செயலாளர் விண்ணப்பம் செய்துள்ளார். மேற்படி விண்ணப்பம் இவ்வலுவலக குழாய் இணைப்பு விண்ணப்ப பதிவேட்டில் வரிசை எண் 67/07ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது 2005ம் ஆண்டு வரை குழாய் இணைப்பு கோரி வரப்பெற்ற விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு குழாய் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது.

மேற்படி கல்லூரி செயலாளர் 14–3–2007ம் தேதியிட்ட மனுவில் மேற்படி கல்லூரியில் 2000 மாணவ, மாணவியர் கல்வி பயின்று வருவதாகவும், ஆசிரியர் மற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை 300க்கு மேல் உள்ளதாகவும் எல்லோருடைய குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு குடிநீர் குழாய் இணைப்பு ஒன்று கல்வி ஸ்தாபனம் என்ற முறையில் முன்னுரிமை அடிப்படையில் வழஙகுமாறு கோரி உள்ளார்.

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் மேற்படி மனு மீது சிறப்பு கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறு 31–3–2007ம் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளார்கள்.

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் 1–10–04ம் தேதிய 31977/2004/குவ2ம் எண் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளபடி இந்நகராட்சிப் பகுதியில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள், அரசு கட்டிடஙகள் அரசு மருத்துவ மனை மற்றும் தீயணைப்புத்துறை ஆகிய இடஙகளுக்கு முன்னுரிமை கொடுத்து புதிய குடிநீர் குழாய் இணைப்பு வழஙக மன்றம் 18–5–2005ம் தேதிய 54ம் எண் தீர்மானத்தில் அனுமதி வழஙகி உள்ளது. மேற்படி காமராஜ் கல்லூரி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 1–10–2004ம் தேதிய சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இனஙகளில் வரவில்லை.

மேற்படி கல்லூரியில் கல்வி பயிலும் மாணவ மாணவியர் ஆசிரியர் மற்றும் அலுவலர்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு கல்வி நிறுவனம் என்ற முறையில் முன்னுரிமை அடிப்படையில் குடிநீர்க் குழாய் இணைப்பு ஒன்று மேற்படி கல்லூரிக்கு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**குறிப்பு**</u> மன்றம் அனுமதி வழஙகலாம்.

இ3. 1909/07

<u>**தீர்மான எண் – 347**</u>

தற்போது நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களிடமிருந்து 4000 குடிநீர் இணைப்புகளுக்கு அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் குடிநீர் இணைப்பு வழஙக தீர்மானிக்கப்பட்டது

5. இந்நகராட்சிப் பகுதி வார்டு எண் 35, கதவு எண் 50பி லெவஞ்சிபுரம் சால்ட் சந்து முகவரியில் அமைந்துள்ள காமராஜ் கல்லூரிக்கு குடிநீர்க் குழாய் இணைப்பு புதியதாக வழஙகுமாறு கோரி வைப்புத்தொகை ரூ 6000/– பதிவுக் கட்டணம் ரூ 100/– செலுத்தி மேற்படி கல்லூரி செயலாளர் விண்ணப்பம் செய்துள்ளார். மேற்படி விண்ணப்பம் இவ்வலுவலக குழாய் இணைப்பு விண்ணப்ப பதிவேட்டில் வரிசை எண் 68/07ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது 2005ம் ஆண்டு வரை குழாய் இணைப்பு கோரி வரப்பெற்ற விண்ணப்பஙகள் பரிசீலனை செய்யப்பட்டு குழாய் இணைப்பு வழஙகப்பட்டு வருகிறது.

மேற்படி கல்லூரி செயலாளர் 14–3–2007ம் தேதியிட்ட மனுவில் மேற்படி கல்லூரியில் 2000 மாணவ மாணவியர் கல்வி பயின்று வருவதாகவும் ஆசிரியர் மற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை 300க்கு மேல் உள்ளதாகவும் எல்லோருடைய குடிநீர்

தேவையை கருத்தில் கொண்டு குடிநீர் குழாய் இணைப்பு ஒன்று கல்வி ஸ்தாபகம் என்ற முறையில் முன்னுரிமை அடிப்படையில் வழஙகுமாறு கோரியுள்ளார்.

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் மேற்படி மனு மீது சிறப்பு கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறு 31–3–2007ம் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளார்கள்.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 1–10–2004ம் தேதிய 31977/2004/குவ 2ம் எண் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளபடி இந்நகராட்சிப் பகுதியிலுள்ள அனைத்து அரசு அலுவலகஙகள் அரசு கட்டிடஙகள், அரசு மருத்துவ மனை மற்றும் தீயணைப்புத்துறை ஆகிய இடஙகளுக்கு முன்னுரிமை கொடுத்து புதிய குடிநீர்க் குழாய் இணைப்பு வழஙக மன்றம் 18–5–2005ம் தேதிய 54ம் எண் தீர்மானத்தில் அனுமதி வழஙகி உள்ளது. மேற்படி காமராஜ் கல்லூரி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 1–10–04ம் தேதிய சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இனஙகளில் வரவில்லை.

மேற்படி கல்லூரியில் கல்வி பயிலும் மாணவ , மாணவியர் ஆசிரியர் மற்றும் அலுவலர்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு கல்வி நிறுவனம் என்ற முறையில் முன்னுரிமை அடிப்படையில் குடிநீர்க் குழாய் இணைப்பு ஒன்று மேற்படி கல்லூரிக்கு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>குறிப்பு</u> மன்றம் அனுமதி வழஙகலாம்.

இ3. 1910/07

<u>**தீர்மான எண் – 348**</u>

தற்போது நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களிடமிருந்து 4000 குடிநீர் இணைப்புகளுக்கு அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் குடிநீர் இணைப்பு வழஙக தீர்மானிக்கப்பட்டது

6. இந்நகராட்சிப் பகுதி வார்டு எண் 16, குரூஸ்புரம் முகவரியில் அமைந்துள்ள புனித அன்னை சிறுமியர் இல்லத்திற்கு (St. Annees Home for Children) புதியதாக குடிநீர்க் குழாய் இணைப்பு ஒன்று வழஙகுமாறு கோரி வைப்புத்தொகை ரூ 3000/– பதிவுக் கட்டணம் ரூ 100/– செலுத்தி மேற்படி இல்ல காப்பாளர் விண்ணப்பம் செய்துள்ளார். மேற்படி விண்ணப்பம் இவ்வலுவலக குழாய் இணைப்பு விண்ணப்ப பதிவேட்டில் வரிசை எண் 316/07ல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி புனித அன்னை சிறுமியர் இல்ல காப்பாளர் தன்னுடைய மனுவில் மேற்படி இல்லத்திற்கு தண்ணீர் போதிய அளவு கிடைக்கவில்லை என்றும், எனவே முன்னுரிமை அடிப்படையில் குழாய் இணைப்பு வழஙகுமாறு கோரியுள்ளார்.

தற்போது 2005ம் ஆண்டு வரை குழாய் இணைப்பு கோரி வரப்பெற்ற விண்ணப்பஙகள் பரிசீலனை செய்யப்பட்டு குழாய் இணைப்பு வழஙகப்பட்டு வருகிறது.

இந்நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 1–10–2004ம் தேதிய 31977/2004) குவ 2ம் எண் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளபடி இந்நகராட்சிப் பகுதியில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள், அரசு கட்டிடங்கள் அரசு மருத்துவ மனை மற்றும் தீயணைப்புத்துறை ஆகிய இடங்களுக்கு முன்னுரிமை கொடுத்து புதிய குடிநீர் குழாய் இணைப்பு வழங்க மன்றம் 18–5–2005ம் தேதிய 54ம் எண் தீர்மானத்தில் அனுமதி வழங்கி உள்ளது.

மேற்படி புனித அன்னை சிறுமியர் இல்லம், சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 1–10–2004ம் தேதிய சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இனங்களில் வரவில்லை.

மேற்படி சிறுமியர் இல்ல குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு குடிநீர்க் குழாய் இணைப்பு ஒன்று முன்னுரிமை அடிப்படையில் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**குறிப்பு**</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.

நகஎண் இ3. 6177/07

<u>**தீர்மான எண் – 349**</u>

தற்போது நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களிடமிருந்து 4000 குடிநீர் இணைப்புகளுக்கு அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் குடிநீர் இணைப்பு வழங்க தீர்மானிக்கப்பட்டது

7. இந்நகராட்சிப் பகுதி வார்டு எண் 50, கதவு எண் 16பி/1 பாளையங்கோட்டை ரோடு மேற்கு முகவரியில் அமைந்துள்ள தூத்துக்குடி டயோசீசன் நற்செய்தி மையத்திற்கு குடிநீர்க் குழாய் இணைப்பு புதியதாக வழங்குமாறு கோரி வைப்புத்தொகை ரூ 3000/– பதிவுக் கட்டணம் ரூ 100/– செலுத்தி மேற்படி மைய இயக்குநர் விண்ணப்பம் செய்துள்ளார். மேற்படி விண்ணப்பம் இவ்வலுவலக குழாய் இணைப்பு விண்ணப்ப பதிவேட்டில் வரிசை எண் 356/07ல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி நற்செய்தி மைய இயக்குநர் தன்னுடைய மனுவில் மேற்படி மையத்திற்கு தினமும் ஆயிரம் மக்கள் பிராத்தனைக்கு வருவதாகவும் அவர்களுக்கு குடிப்பதற்கு குடிநீர் வசதி இல்லை என்றும், எனவே குடிநீர் குழாய் இணைப்பு வழங்குமாறும் கோரியுள்ளார்.

50வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திரு வி..எஸ்.ஆர் பிரபு அவர்கள் மேற்படி இடம் வழிபாட்டு ஸ்தலமாக இருப்பதால் பொதுமக்கள் சேவையை கருத்தில் கொண்டு முன்னுரிமை அடிப்படையில் குழாய் இணைப்பு வழங்க ஆவண செய்யுமாறு தன்னுடைய கடிதத்தில் கோரியுள்ளார்.

தற்போது 2005ம் ஆண்டு வரை குழாய் இணைப்பு கோரி வரப்பெற்ற விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு குழாய் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 1–10–2004ம் தேதிய 31977/2004/குவ2ம் எண் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளபடி இந்நகராட்சிப் பகுதியிலுள்ள அனைத்து அரசு அலுவலகங்கள், அரசு கட்டிடங்கள் அரசு மருத்துவ மனை மற்றும் தீயணைப்புத்துறை ஆகிய இடங்களுக்கு முன்னுரிமை கொடுத்து புதிய குடிநீர்க் குழாய் இணைப்பு வழங்க மன்றம் 18–5–2005ம் தேதிய 54ம் எண் தீர்மானத்தில் அனுமதி வழங்கி உள்ளது.

மேற்படி தூத்துக்குடி டயோசீசன் நற்செய்தி மையம் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 1–10–2004ம் தேதிய சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இனஙகளில் வரவில்லை.

மேற்படி நற்செய்தி மையம் வழிபாட்டு ஸ்தலமாக செயல்படுவதாலும், மேற்படி மையத்திற்கு பிரார்த்தனைக்கு வரும் மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டும், குடிநீர் குழாய் இணைப்பு ஒன்று முன்னுரிமை அடிப்படையில் வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>குறிப்பு</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.

நகஎண் இ3. 6965/07

**<u>தீர்மான எண் – 350</u>**

தற்போது நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களிடமிருந்து 4000 குடிநீர் இணைப்புகளுக்கு அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் குடிநீர் இணைப்பு வழஙக தீர்மானிக்கப்பட்டது

8. இந்நகராட்சிப் பகுதி வார்டு எண் 43. கதவு எண் 9டி/3 டூவிபுரம் 3வது தெரு முகவரிக்கு குடிநீர் குழாய் இணைப்பு ஒன்று புதியதாக வழஙகுமாறு கோரி வைப்புத்தொகை ரூ 3000/– பதிவுக் கட்டணம் ரூ 100/– செலுத்தி திரு ராஜ்குமார் அவர்கள் விண்ணப்பம் செய்துள்ளார். மேற்படி விண்ணப்பம் இவ்வலுவலக குழாய் இணைப்பு விண்ணப்ப பதிவேட்டில் வரிசை எண் 178/07ல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

16வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி ஆர். ப்ளவர் ராஜ்குமார் அவர்கள் மேற்படி முகவரிக்கு முன்னுரிமை அடிப்படையில் குடிநீர் குழாய் இணைப்பு வழங்குமாறு கோரியுள்ளார்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அரசாணை எண் 47 நாள் 9–2–1999 மற்றும் அரசாணை எண் 39 நாள் 24–3–2000ல் நகர்மன்ற உறுப்பினர்கள் குடியிருக்கும் சொந்த குடியிருப்பு அல்லது வாடகை குடியிருப்புக்கு அன்னாரது பதவிக் காலமான 5 வருடத்தில் ஒரு முறை அவர்கள் குடியிருக்கும் ஒரு வீட்டுக்கு ஒரே ஒரு குடிநீர் குழாய் இணைப்பு வழங்குவது குறித்து நகர்மன்றஙகளே முடிவு எடுக்கலாம் என்று ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

எனவே அரசாணைப்படி 16வது வார்டு நகர்ம.ற உறுப்பினர் கோரியபடி கதவு எண் 9டி/3 டூவிபுரம் 3வது தெரு முகவரிக்கு முன்னுரிமை அடிப்படையில் குடிநீர் குழாய் இணைப்பு ஒன்று வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

குறிப்பு 1. மன்றம் அனுமதி வழஙகலாம்
2.குடிநீர் விநியோக உபவிதிகளுக்கு உட்பட்டு குழாய் இணைப்பு வழஙகலாம்.

நகஎண் இ3. 3921/07

<u>**தீர்மான எண் – 351**</u>

அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதி வழஙகப்பட்டது

9. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பொது சுகாதார துப்புரவு பணிக்கு தேவையான கிருமி நாசினி பொருட்கள் ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று வாஙக ஒப்பந்தப்புள்ளி அறிக்கையினை தினத்தந்தி நாளிதழில் 26–05–2007ம் தேதி ஒரு நாள் மட்டும் விளம்பரம் செய்த வகையில் உத்தேச செலவுத்தொகை ரூ 4500/– (ரூபாய் நான்காயிரத்து ஐந்நூறு மட்டும்) நகராட்சி பொது நிதியிருந்து வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**குறிப்பு**</u> அனுமதிக்கலாம்.

எச்1. 4193/2007

<u>**தீர்மான எண் – 352**</u>

அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது

10. இந்நகராட்சி எட்டையாபுரம் ரோட்டில் அமைந்துள்ள 3வது ரயில்வே கேட்டில் மேம்பாலம் கட்டுதல் பணியினை நிறுத்திடவும், மேம்பாலம் கட்டுமான பணிகள் குறித்து வல்லுநர் குழு (Expert Committee) நியமித்து கருத்துகளை பெறவும் பல்லவன் போக்குவரத்து சர்வீஸ் லிமிடெட் சமர்ப்பித்துள்ள கலந்தாய்வு அறிக்கையின்படி பணிகள் மேற்கொள்ள கேட்டு திரு பி. கதிர்வேல் த/பெ பெருமாள் என்பவர் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு எண் WP(MD) No. 3215/07-ல் வழக்கு தொடுத்துள்ளார் இந்த வழக்கில் தூத்துக்குடி நகராட்சி ஆணையரை 8வது பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளதால் இவ்வழக்கினை எதிர்த்து நகராட்சி சார்பாக வழக்காட வழக்கறிஞரை நியமிக்கவும் அதற்கான செலவினஙகளுக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**குறிப்பு**</u> அனுமதிக்கலாம்.

ஜி1. 3343/07

<u>**தீர்மான எண் – 353**</u>

அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது

11. இந்நகராட்சிக்கு சொந்தமான TN69- சி105 மினி லாரி தகுதி சான்று காலம் முடிவடைவதால் தேவையான பழுதுநீக்கப் பணிகள் செய்து வட்டார போக்குவரத்து

அலுவலகத்தில் தகுதிச் சான்று பெற வேண்டும். இதற்கான செலவீனத்திற்கு மன்றம் தனது தீர்மான எண் 672 நாள் 22–5–2006ல் அனுமதி அளித்துள்ளதின் பேரில் 6–6–2007ல் விலைப்புள்ளிகள் கோரியதில் மூன்று அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் இருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

1. மெசர்ஸ் அய்யனார் ஆட்டோமொபைல்ஸ் அன்ட் இன்ஜினியரிங ஒர்க்ஸ் போல்பேட்டை, தூத்துக்குடி ...ரூ 24,360/–

2. மெசர்ஸ் ஆர்.என்.ஆர். மெக்கானிக்கல் ஒர்க்ஸ், சிதம்பரநகர், தூத்துக்குடி ....ரூ 19,550/–

3. மெசர்ஸ் ஜெய் ஆட்டோ கேரேஷ், கால்டுவெல் காலனி, தூத்துக்குடி ....ரூ 22,170/–

## <u>அலுவலகக் குறிப்பு</u>

வாகனம் சாலையில் இயக்க தகுதிச் சான்று அவசியம் என்பதால் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ் ஆர்என்ஆர் மெக்கானிக்கல் ஒர்க்ஸ் நிறுவனத்தை ஏற்று அனுமதிக்கலாம்.

நகஎண் 005886/2007/இ1

**<u>தீர்மான எண் – 354</u>**

அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது

12. இந்நகராட்சிக்குட்பட்ட இராஜாஜி பூஙகா நீரேற்று நிலையத்தில் அமைந்துள்ள 40 கு.வேக திறன் கொண்ட மின் மோட்டாரின்( சுப்பையா பார்க் மற்றும் குரூஸ்புரம் O H T க்கு நீரேற்றக் கூடிய மோட்டார்) ஸ்டேட்டர் வைண்டிஙக எரிந்து போன நிலையில் உள்ளது. மேற்படி மோட்டாரை உடன் ரீவைண்டிஙக செய்வதற்கும், மேற்படி வேலையை செய்ய அதற்குரிய உத்தேச செலவுத்தொகை ரூ 12,000/–க்கும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>குறிப்பு</u> மன்றம் அனுமதிக்கலாம்.

இ3. 006826/07

**<u>தீர்மான எண் – 355</u>**

அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது

13. இந்நகராட்சி முத்துசாமித்தெரு, மணக் காவலன் தெரு, டேவிஸ்புரம் மேற்கு, பிரதான சாலைகளில் உள்ள மழைநீர் வடிகால் உடைந்து கழிவுநீர் சாலைகளில் தேஙகுவதால் சாலை உடைந்து போக்குவரத்து பாதிக்கப்படும். எனவே மேற்கண்ட

சாலைகளில் உள்ள வடிகாலை உயர்த்திக் கட்ட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ 1,20,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

மபஎண் 39/2007–08

**<u>தீர்மான எண் – 356</u>**

அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது

14. இந்நகராட்சி கான்வென்ட் ரோட்டில் ஹோலிகிராஸ் கான்வென்ட் அருகிலுள்ள சிறுபாலம் உடைந்து கழிவுநீர் வெளியேறுவதால் பள்ளிக்கு வரும் மாணவர்கள் மிகவும் அவதிப்படுவதால் மேற்கண்ட இடத்தில் சிறுபாலம் அமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 15,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

மபஎண் 40/2007–08

**<u>தீர்மான எண் – 357</u>**

அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது

15. இந்நகராட்சி போல்பேட்டை முத்தாரம்மன் கோவில் தெரு மிகவும் பள்ளமாக உள்ளதால் மழைகாலஙகளில் மழைநீர் தேஙகுகிறது. எனவே போக்குவரத்திற்கு சிரமமாக உள்ளது மேற்கண்ட தெருவில் சிமெண்ட் தளம் அமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 1,30,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

மபஎண் 41/2007–08

**<u>தீர்மான எண் – 358</u>**

அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது

16. பொன்விழா ஆண்டு நகர்புற வேலைவாய்ப்புத்திட்டத்தின் கீழ் இந்நகராட்சிப் பகுதியில் 2003ம் ஆண்டில் மொத்தம் உள்ள 48509 குடும்பஙகளில் தனி நபர் மாத வருமானம் ரூ 500.93 பைசா என்ற அடிப்படையில் 10379 குடும்பஙகள் வறுமை கோட்டிற்கு கீழ் வருவதாக கண்டறியப்பட்டது.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 12–1–2007ம் தேதிய UPA-4/35681/2006ம் தேதிய கடிதத்தில் 2003ம் ஆண்டில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பு பட்டியலை 2007ம் ஆண்டில் சரிபார்த்து சேர்த்தல், நீக்கல் தொடர்பான பணிகளை முடிக்க தெரிவிக்கப்பட்டதின் பேரில் இந்நகராட்சியில் இது தொடர்பாக பணிகள் மேற்கொள்ளப்பட்டு பொது மக்களுக்கு அறிவிப்பு செய்யப்பட்டதில் புதிதாக சேர்த்தலுக்கான விண்ணப்பஙகள் 11,070 பெறப்பட்டது. ஏற்கனவே உள்ள பட்டியலில் நீக்கம் தொடர்பாக மனுக்கள் ஏதும் பெறப்படவில்லை. எனினும் சேர்த்தலுக்காக பெறப்பட்ட 11,070 மனுக்களும் இந்நகராட்சியின் 51 கணக்கெடுப்பாளர்கள் மற்றும் 16 மேற்பார்வையாளர்கள் மூலம் நேராய்வு செய்யப்பட்டது. இதில் ஆய்வு செய்யப்பட்ட சர்வே

படிவஙகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்டதில் 11,070 விண்ணப்பஙகளில் சேர்த்தலுக்கு பரிந்துரை செய்யப்பட்ட 8650 குடும்பஙகள் போக மீதம் 2420விண்ணப்பஙகளை நிராகரிக்கப்பட்டது. எனவே தற்போது சேர்த்தல், நீக்கல் முடிவடைந்த பின்பு தயாரிக்கப்பட்ட வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்களின் புதிய பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** புதிய பட்டியலை மன்றம் ஒப்புதல் செய்யலாம்.

ஜி6. 2338/2007

**<u>தீர்மான எண் – 359</u>**

அலுவலகக் குறிப்பு படி ஒப்புதல் செய்யப்பட்டது

17. தூத்துக்குடி நகராட்சி ஒப்பந்தகாரர்களிடம் பிடித்தம் செய்யப்பட்ட 2006–07ம் ஆண்டிற்கான வருமானவரி, விற்பனை வரி அரசுக் கணக்கில் செலுத்திய விபரம் தொடர்பான படிவம் 16A மற்றும் 37A தயார் செய்து வழஙகியதற்கு த. முத்துகிருஷ்ணன் (கிருஷ்ணா அக்கவுண்ட்ஸ் வோ்ல்டு) நிறுவனத்தாருக்கு தொகை ரூ 4075/–ஐ வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

நகஎண் பி6. 16227/2003

**<u>தீர்மான எண் – 360</u>**

அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது

18. இந்நகராட்சி பகுதி வார்டு எண் 41–ல் உள்ள டூவிபுரம் மேற்கு மகிழ்ச்சிபுரம் பகுதியில் உள்ள பகிர்மான குழாய் மண் அடைப்பு ஏற்பட்டு சேதமடைந்துள்ளது. எனவே அந்த பகிர்மான குழாய்க்கு பதிலாக 110 mm PVC பகிர்மானக் குழாய் 450 மீட்டர் நீளம் பதிக்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ 69,000/–க்கு (ரூபாய் அறுபத்தொண்பதாயிரம் மட்டும்) மன்றத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

மபஎண் 42/2007–08

**<u>தீர்மான எண் – 361</u>**

அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது

தலைவர்,
நகர்மன்றம், தூத்துக்குடி

நகர்மன்றம், தூத்துக்குடி
நாள் 19–06–2007